1. மனிதவள முகாமைத்துவத்தின் அடிப்படை நோக்கங்களுள் ஒன்று

1. நிறுவனத்தின் இலாபம்
2. பணியாட்களின் திருப்தி மற்றும் நலன்
3. நடத்தை மாற்றம்
4. மேற்கூறிய எதுவுமல்ல

2. பணியாட்களின் பயிற்சி தேவைகளை அறிந்து கொள்ள கூடிய முறை

1. செயலாற்றுகை மதிப்பீடு
2. தரவுகள்
3. அவதானிப்பு
4. மேற்கூறிய யாவும்

3. தகுதிகாண் காலத்திலுள்ள ஊழியர் ஒருவருக்கு தனது கருமங்களை உரியமுறையில் நிறைவேற்ற முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் அவர் தொடர்பில் எடுக்கக்கூடிய நடவடிக்கை

1. சேவையினை முடிவுக்கு கொண்டுவருதல்
2. தண்டப்பணம் அறவிடுதல்
3. பதவியுயர்வு வழங்குதல்
4. சம்பள ஏற்றத்தை நிறுத்துதல்

4. பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைதிட்டமானது செயற்படுத்தப்படுவது

1. ஆசிரியர்களின் பதவியுயர்விற்கு
2. அனைத்து ஆசிரியர்களையும் தொழில் வாண்மையாளராக்குவதற்கு
3. ஆசிரியர்களின் சம்பள ஏற்றத்திற்கு
4. பாடசாலை கருமங்களை செவ்வனே நிறைவேற்றி கொள்வதற்கு

5. பாடசாலை மட்ட ஆசிரிய வாண்மை விருத்திக்கு பொறுப்பான உபகுழுவில் இருக்கக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கை

1. 5 தொடக்கம் 12 வரை
2. 4 தொடக்கம் 10 வரை
3. 3 தொடக்கம் 10 வரை
4. வரையறையற்றது

LIVEWORKSHEETS